# சபரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம் - வாராந்த பாடசாலை

of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa

## தமிழ்மொழியும் இலக்கியமும்

தரம் 10

வாரம் 11

1) சுருக்கமான விடை தருக,

1. "வண்டோ கானகத்திடை வந்து கமல மது உண்ணும்.."
   1) இங்கு வண்டு எதற்கு ஒப்பிடப்பட்டுள்ளது?
   2) இந்நூல் எக்காலத்திற்குரியதாக எண்ணப்படுகிறது?
2. "ஓர் தட்டிலே பொன்னும் ஓர் தட்டிலே நெல்லும்"
   1) இப்பாடல் இடம்பெறும் நூல் எது?
   2) இதைப்பாடியவர் யார்?
3. "புலங்களோடு கரணமும் ஆவியும்"
   1) ஐம்புலங்கள் எவை?
   2) கரணங்கள் எவை?
4. "யானை அனையவர் நன்பொறீஇ.."
   1) இப்பாடலில் எவ்வகை நற்பு சிறந்தது? எவ்வகை நற்பு கூடாது என்றுக் கூறப்படுகிறது?
   2) அதற்கான காரணம் என்ன?
5. "பங்கப் பழனத்து உழவர் உழுது…"
   1) இப்பாடலில் கூறப்படும் தமிழ்நாட்டு வளங்கள் பற்றி கூறுக,
   2) சோழ மன்னன் பற்றிக் கூறப்படுபவை யாவை?
6. நாவலர் எழுந்தார் எனும் கட்டுரையில்
   1) நாவலர் அவர்களின், திறமை , நேர்மை, இயல்பு முதலானவற்றை எழுதுக?
   2) பிறிட்றோவின் நேர்மையற்ற செயற்பாடுகள் யாவை?
7. "பாரதியாரின் சுயசரிதை" யில்
   1) பாரதியாரின் பிள்ளைக் காதல்
   2) அன்பு கொண்டவள் மீதான எதிர்ப்பார்ப்பு எவ்வாறு வெளிப்படுகிறது?
8. "உப்பில்லாக் கஞ்சியினை…" எனத் தொடங்கும் பாடலில்,
   1) இதில் பயன்படுத்தப்பட்டுள்ள முதுமொழி யாது?
   2) அறுசுவைகளும் எவை?
9. விளம்பரம் ஒன்றில் இடம்பெறவேண்டிய அம்சங்கள் 03 எழுதுக,
10. தொழின்முறைக்கடிதம் ஒன்றின் உறுப்புகள் யாவை?

2) பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒரு தலைப்பை தெரிவு செய்து 250 சொற்களில் கட்டுரை எழுதுக,

1. ஒழுக்கத்தை பேணுவோம் - மேடைப்பேச்சு
2. வாசிப்பே மனிதனின் அறிவை தூண்டி பூரணமாக்கும். –விளக்கக் கட்டுரை
3. மனித நேயம் - சிறுகதை

3) அண்மையில் நடைப்பெற்ற வன்செயல்களினால் பாதிக்கப்பட்டு அனாதையான உமது நண்பனுக்கு ஆறுதல் கூறியும் அவரது கஷ்டத்தை எடுத்துக்கூறியும் 100 சொற்களில் கடிதம் எழுதவும்.